பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 23 வியாழக்கிழமை 06-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 159

## இன்று பிரேமாவின் இறுதிக் கிரியைகளின் போது

# கொழும்பில் தமிழரைத் தாக்க அமைச்சர் தலைமையில் சதி!

## எதிரணியினருக்கு எதிராகவும் வன்முறைச் சம்பவங்கள்

லண்டன், மே 6

படுகொலையுண்ட ஜனாதிபதி பிரேமதாஸாவின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும் சமயம் கொழும்பு நகரில் தமிழர்களின் வீடுகளையும், கடைகளையும் தாக்கும் சதித்திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ள அமைச்சர் ஒருவரின் தலைமையின் கீழ் இத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது

''லக்திவ' பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த தர்மசிறி காரியவாசம் இச்சதி பற்றிய தகவலை வெளியிட்டதாக பி பி ஸி. சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

தமிழருக்கு எதிரான தாக்குதல்களை நடத்துவது குறித்து, பிரஸ்தாப அமைச்சரின் தலைமையில் நேற்று கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் —

அந்த அமைச்சரின் நெறிப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை நிறுவனங்களை தாக்கவும் திட்டமாம்!

இன்று ஜனாதிபதி பிரேமதாஸாவின் இறுதிக் கிரியைகள் நடக்கும் சமயத்தில் அரசுக்கு எதிராகச் செயற்படுபவை எனக் கருதப்படும் பத்திரிகை நிறுவனங்களைத் தாக்குவதற்கும் சிலர் திட்டமிட்டிருப்பதாக சுயாதீனப் பத்திரிகையாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக சம்பந்தப்பட்ட பத்திரிகைகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கும்படி சுயாதீன வெகுஜனத் தொடர்பு இயக்கம் பதில் ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறது.

## வாழைத் தோட்டப் பகுதியில் தமிழரின் கடைகளுக்கு தீ!

யாழ்ப்பாணம், மே 6

நேற்று முன்தினம் கொழும்பு வாழைத் தோட்டப் பகுதியில் கும்பல் ஒன்று தமிழர்களுக்கு சொந்தமான சில கடைகளை தீக்கிரையாக்கியதாகவும் —

அந்த இடத்துக்கு விரைந்து வந்த பொலீஸார் அக் கும்பலைக் கலைத்ததாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஒரு கடை முற்றாக சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது

அப்பகுதியில் இருந்து தமிழ் மக்கள் இடம் பெயர்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்பில் இருந்து 7,000 தமிழர் வெளியேறினர்

### பலர் வவுனியா வந்தனர்

கொழும்பில் வாழைத் தோட்டம், கொட்டாஞ்சேனை, குணசிங்கபுரம், புறக்கோட்டைப் பகுதிகளிலிருந்து சுமார் ஏழாயிரம் தமிழர்கள் வரை மூடை முடிச்சுகளுடன் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாஸா கொலையுண்டதை அடுத்து தாங்கள் தாக்கப்படலாம் என்ற அச்சத்தில் அவர்கள் இடம்பெயர்ந்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில்—

தலைநகர் கொழும்பில் இருந்து அச்சத்தால் வெளியேறும் தமிழர்கள் வவுனியாவுக்கு வருவதாக வவுனியாவிலிருந்து கிடைத்த செய்தி ஒன்றை மேற்கோள் காட்டி வெரித்தாஸ்வானொலி அறிவித்தது

## 30 தமிழ் இளைஞர்கள் கைது

ஜனாதிபதி பிரேமதாஸ கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கொழும்பில் 30 தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

வெள்ளவத்தையில் உள்ள ஹோட்டல் ஒன்றை முற்றுகையிட்ட பொலீஸார் அங்கு தங்கியிருந்த தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர் என இந்திய வானொலி அறிவித்தது

## நீண்டவரிசையில் மக்கள் கூட்டம்

ஜனாதிபதி மாளிகையில் வைக்கப்பட்டுள்ள பிரேமதாஸாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மக்கள் நடமாட்டம் குறைவு

நேற்று விடுமுறை தினமாதலாலும், தலைநகரில் பதற்ற நிலை நிலவியதாலும் கொழும்பு நகர வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

பிரேமாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகச் செல்வோரின் வாகனங்களும், படையினர், பொலீஸாரின் வாகனங்களுமே வீதியில் அதிகம் ஓடித்திரிந்தன.

## இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 6

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

[உ]

## வங்கிகளுக்கு 4 கோடி ரூபா வந்தது

யாழ்ப்பாணம், மே 6

மக்கள் வங்கிக்கு 2 கோடி ரூபா பணமும், இலங்கை வங்கிக்கு 2 கோடி ரூபா பணமும் ''வாதுவ'' கப்பல் மூலம் நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தன.

(உ-8)

## தலைநகரில் குழப்பம் ஏற்படுத்த முயற்சி!

### சிறிசேன கூரே எச்சரிக்கை

தலைநகரில் குழப்பம் விளைவிப்பதற்கான முயற்சிகள் காணப்படுகின்றன. அப்பாவி மக்களை வன்செயல்களில் ஈடுபடுத்த சிலர் முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே.

இத்துன்பகரமான வேளையில் உலகத் தலைவர்களின் அனுதாபங்கள் எங்கள் பக்கம் இருக்கிறது. அதற்கு இணங்க நாம் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்பு ஏற்பாடு தலைநகரில் தீவிரம்

ஜனாதிபதி பிரேமதாஸாவின் இறுதிக் கிரியைகளை ஒட்டியும்—

தமிழர்கள் தாக்கப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுவதாலும்—

கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பின் பாதுகாப்பிற்காக வெளிமாவட்டங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையில் பொலீஸாரும், இராணுவத்தினரும் கொழும்புக்குக் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளனர்.

வீதிகளில் நெருக்கமாக முப்படைகளும், பொலீஸாரும் நிறுத்தப்பட்டுள்ளனர்.

நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள், கவச வாகனங்கள் வீதிகளில் ரோந்து வருகின்றன.

## இறுதிக்கிரியை இன்று

ஜனாதிபதி பிரேமதாஸாவின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறவிருக்கின்றன.

ஜனாதிபதி மாளிகையில் வைக்கப்பட்டிருக்கும் பிரேமதாஸாவின் பூதவுடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இன்று காலை 11 மணிக்கு பூதவுடல் அங்கிருந்து ஊர்வலமாக கொழும்பு சுதந்திர சதுக்கத்துக்குக் கொண்டு செல்லப்படும் அங்கு மாலையில் இறுதிக் கிரியைகள் நடைபெறும்.

## புதிய ஜனாதிபதியின் கீழ் புதிதாக அமைச்சரவை

புதிய ஜனாதிபதி பதவி ஏற்றதும், புதிய அமைச்சரவை அறிவிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வாரம் அளவில் புதிய ஜனாதிபதி பதவி ஏற்பதோடு தற்போதைய அமைச்சரவை பதவி இழக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஜனாதிபதி பதவி ஏற்றதும் புதிய அமைச்சரவையை நியமிக்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. (உ-எ)

## பிரேமாவின் உடலிலிருந்து பல ரவைகள் அகற்றப்பட்டன

### சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை

கொழும்பு, மே 6

பிரேமாவின் கருகிய உடலில் இருந்து பல ரவைகள் அகற்றப்பட்டன.

கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எல்.பி.எல்.டி. அல்விஸ் தமது அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் உடலை பிரேத பரிசோதனை செய்த அவர் தமது அறிக்கையை கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குண்டுத்தாக்குதலில் பிரேமதாஸாவின் முகம் கருகியிருந்தது. அவரது வலது கண் வெளியே தள்ளப்பட்டு இருந்தது. அவரது வலது தோள் உடைந்து, ஒரு மெல்லிய தோலில் தொங்கிய வண்ணம் காணப்பட்டது. அவரது முழு வயிறும் பிளந்து இருந்தது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லலித் கொலை தொடர்பான அநாமதேயத் தகவல்

## பிரிட்டிஷ் தூதரகத்துக்கு வந்தது

லலித் அத்துலத்முதலி கொலை தொடர்பான அநாமதேயத் தகவல் ஒன்று கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்குக் கிடைத்திருப்பதாகவும்—

அத்தகவல் ஸ்கொட்லண்ட் யார்ட் துப்பறியும் நிபுணர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் உள்ள பிரிட்டனின் பிரதித் தூதர் றொனால்ட் நாஷ் தெரிவித்தார்.

இப்படியான தகவல்களை அனுப்பிவைக்கும் படி பிரிட்டிஷ் தூதரகம் கோராது என்றும்—

எனினும் கிடைக்கும் தகவல் கட ஸ்கொட்லண்ட்யாட் துப்பறிவாளர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

## லலித் கொலை; அரசு காரணமானால்

# அமெரிக்க - இலங்கை உறவு கேள்விக்குரியதாகுமாம்

கொழும்பு, மே 6

லலித் அத்துலத் முதலியின் கொலைக்கு அரசாங்கமே பொறுப்பு என்று காணப்படும் பட்சத்தில் அது அமெரிக்க— இலங்கை உறவைக் கேள்விக்குரியதாக்கலாம்;

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் றொபர்ட் ரொறிசெல்லி முன்கண்டவாறு கூறினார்.

இவர் அமெரிக்க காங்கிரஸின் வெளிவிசகாரக் கமிட்டியின் சிரேஷ்ட உறுப்பினராகவும், ஆசிய பசுபிக் விவகார உபகமிட்டி உறுப்பினராகவும் இருக்கிறார்.

அத்துலத் முதலியின் கொலை அரசாங்கமே பொறுப்பு எனக் காணப்பட்டால் இப்படியான நடத்தைக்குச் சன்மானமாக வெளிநாட்டு டொலர் உதவிகள் கிடைக்கமாட்டா என்ற செய்தியை அமெரிக்கா இலங்கைக்கு அனுப்பும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

## சர்ச்சைக்குரிய

# பொலீஸ் அதிகாரி காணாமல் போனார்?

கொழும்பு, மே 6

லலித் அத்துலத் முதலி கொலையுண்ட கிருலப்பனைக் கூட்டத்துக்கு பாதுகாப்பு வழங்க வேண்டாம் என சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தமக்கு உத்தரவிட்டார் என்று அறிவித்த கிருலப்பனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கடந்த புதன் கிழமை முதல் காணாமல் போயிருப்பதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் வாய்மூலம் விடுத்த உத்தரவை அடுத்தே கிருலப்பனைக் கூட்டத்துக்கு தாம் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்று கிருலப்பனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெஸ்லி ரணதிலக தெரிவித்திருந்ததும்—

அதைத் தொடர்ந்து அவர் உடனடியாக களுத்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்ததும் தெரிந்தவையே.

களுத்துறைக்கு செல்லும் வழியில் கடந்த புதன்கிழமை அவர் காணாமல் போனதாகக் கூறப்படுகிறது. (உ-3)

## முகலம் வீதிப் பகுதியில்

# சடலமாகக் காணப்பட்டவர் லலித்தை சுட்டவர் அல்லர்!

## துப்பறியும் நிபுணர்கள் முடிவு

லலித் அத்துலத் முதலி கொலை பற்றி விசாரணை நடத்தி வரும் ஸ்கொட்லண்ட் யார்ட் துப்பறியும் நிபுணர்கள் நடத்திய விசாரணையின் படி—

கிருலப்பனை முகலம் வீதியில் கிடந்த சடலம், லலித்தைச் சுட்டவருடையது அல்ல என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

துப்பறியும் நிபுணர் ஒருவரை மேற்கோள் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

முகலம் வீதியில் சடலமாகக் கிடந்த நபர் அத்துலத் முதலியைக் கொலை செய்துவிட்டு எப்படி தப்பி ஓடினார் என்பதைக் கண்டறிவதற்காக ஸ்கொட்லண்ட் யார்ட் துப்பறியும் நிபுணர்கள், கிருலப்பனையில் அத்துலத் முதலி பேசிய இடத்துக்குச் சென்று, மாதிரி ஓட்டம் ஒன்றை நடத்திப் பார்த்தனர் என்றும்—

அதன் பின்னர் சடலமாக கிடந்த நபர் அத்துலத் முதலியைக் கொலை செய்தவர் அல்லர் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர் என்றும் துப்பறியும் நிபுணர் ஒருவர் தெரிவித்தார். (உ-)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

**வாக்காளர் பட்டியல் 31-03-93**

எமது சங்கத்தின் 31-03-93 வரையிலான வாக்காளர் பட்டியல்கள் கிளைகள் — 1, 2, 3, 5, 13 க்கு உரியவை, கிளைகள் — 4, 6, 9, 12க்கு உரியவை, கிளைகள் — 7, 8, 10, 11 க்கு உரியவை முறையே பண்ணை வீதியில் தற்போது அமைந்துள்ள கிளை - 1 கிளை – 2, கிளை – 3, ஆகியவற்றில் அங்கத்தவர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து மூலம் 25-05-93 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ ''செயலாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், பி. எஸ் சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர் தலைவர்

(சி-5091)

# முக்கிய தகவல் கிடைத்துள்ளதாம்

கொழும்பு, மே 6

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொலை பற்றிய விசாரணையில் முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

விசாரணை முடிவடைந்ததும் அவை வெளிப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

—கொழும்புப் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

# ''வாதுவ'' வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், மே 6

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி மாவை ஏற்றிக் கொண்டு 'வாதுவ' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்தது. (உ-5)

# இன்று

யாழ். இந்துககல்லூரி பழைய மாணவர் சங்கம் வழங்கும் முழுநிலா நாள் அறிவியலரங்கு இன்று வியாழன் பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

இன்றைய நிகழ்வில் ''வடக்குக் கிழக்கு பிரதேச புவியியல் அமைவு'' பற்றி யாழ். பல்கலைக்கழகப் புவியியற் துறைத் தலைவர் திரு செ பாலச்சந்திரனும் ''கணனி ஓர் அறிமுகம்'' எனும் பொருள் பற்றி யாழ் பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறை உதவி விரிவுரையாளர் திரு. சோ. கண்ணனும் உரை நிகழ்த்துவார்கள். (௪)

o o o

சுன்னாகம் மயிலணி பகவான் ஸ்ரீ சத்ய சாயி பஜனை நிலையத்தில் இன்று வியாழன் பிற்பகல் 2மணி தொடக்கம் ஈஸ்வராம்மா விழா நடைபெறும். பஜனை, நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (க)

o o o

இணுவில் மேற்கு ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு மகாபாரதம் தொடர் சொற்பொழிவு ஆற்றிய குமாரசாமி சண்முகநாதனுக்கு மேற்படி தேவஸ்தானம் இன்று ''மெய்ஞான சாகரம்'' என்ற விருதை வழங்கி கௌரவிக்கவிருக்கிறது

# நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு திரு. வி. தயாளசவுந்தரனின் புல்லாங்குழலிசை இடம்பெறும். (க)

o o o

யாழ் பாணம், மே 6

யாழ்ப்பாண பிரிவுச் செயலக ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் சிறப்புக் கூட்டமும், வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பியின் நினைவஞ்சலிக் கூட்டமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். செயலக மண்டபத்தில் மாவட்ட பிரதி ஆணையாளர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும்.

வட. கிழக்கு மாகாணசபை சுகாதார மகளிர் விவகார அமைச்சின் மாற்று மருத்துவப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ப. உரோமகேஸ்வரனும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார். (ஒ-17)

o o o

பளை மகாவித்தியாலய சாரணர் குழுவின் 12 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மலர் வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பளை மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (ஒ)

# விளையாட்டு நிகழ்வுகள்

''ஷப்றா'' கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ காலை 8.30 மணி:- கிறாஸ் கொப்பர்ஸ் வி. க. அணி எதிர் ஸ்கந்தா ஐக்கிய வி. க. அணி

★ பிற்பகல் 1.30 மணி:- மானிப்பாய் பரிஷ் வி. க. அணி எதிர் ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. அணி

o o o

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி ஜங்கரன் விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

காலை 8.30 மணி:- யாழ். செயலக அணி எதிர் கிறீன் கிங்ஸ் வி. க. அணி

பிற்பகல் 2 30 மணி:- மக்கள் வங்கி வி. க. அணி எதிர் இளம் தென்றல் வி க. அணி

o o o

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தினால் நடத்தப்படும் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ குப்பிளான் அறிவொளி வி. க. எதிர் உரும்பராய் அண்ணா வி. க.

★ புங்குடுதீவு அம்பாள் வி. க. எதிர் உரும்பராய் சரஸ்வதி வி. க

o o o

அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பாஷையூர் மக்கள் முன்னேற்ற சங்க சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வந்த விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு பாஷையூர் சென். அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும். யுபிற்றர்ஸ் வி. க. அணியை எதிர்த்து சென். மைக்கல்ஸ் வி. சு. அணி மோதும் (உ-17)

# உடற்கல்வி பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மே 6

யாழ். மாவட்ட உடற்கல்வி ஆசிரியர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் உடற்கல்வி பயில்நெறி நாளை காலை 8 30 மணிக்கு திட்டமிட்டபடி கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என உடற்கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [உ]

**மொழி பெயர்ப்பாளர்கள் தேவை**

ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க வல்லவர்கள் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

இல. 523 மே/பா
உதயன்

(15549)

# மரண அறிவித்தல்கள்

## சிவகுரு பொன்னம்பலம்

(இளைப்பாறிய புகையிரத பாதுகாவலர்)

கம்பர்மலை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவகுரு பொன்னம்பலம் 01 - 05 - 1993 அன்று காலமாகிவிட்டார். இவர் கண்மணியின் அன்புக் கணவரும், அருந்தவராணி, புஸ்பராணி, அருந்தவராசா (சுவிஸ்), புஸ்பராசா (ஜேர்மனி), பிரேமராணி, ரஜனி (யாழ். பல்கலைக்கழகம், கலைப்பீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மலிங்கம் (ஜேர்மனி), உத்தரராசா (சுவிஸ்), அருந்தவராசா (ஆசிரியர், கற்சிலைமடு - ஒட்டுசுட்டான்), தர்மினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 03 – 05 – 1993 திங்கட்கிழமை அன்று நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (25540)

## திருமதி சரஸ்வதி இரத்தினம்

வேலணை 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், தற்போது 59, குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வசிப்பவருமாகிய திருமதி சரஸ்வதி இரத்தினம் நேற்று (5-5-93) சிவபதமடைந்தார். அன்னார் இரத்தினம் (காலி) அவர்களின் அன்பு மனைவியாரும், சௌந்தரநாயகி (மலர் — ஆசிரியை, வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தாயாரும், சுபாஸ்கரன் (சித்த வைத்திய பகுதி, யாழ். மாநகரசபை) அவர்களின் அன்பு மாமியாரும், மயில்வாகனம், சண்முகரத்தினம், சிவசுப்பிரமணியம் (உரிமையாளர், ஜெயலட்சுமி கம்பனி), காலஞ்சென்றவர்களான சின்னலட்சுமி, பராசக்தி, சுப்பையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தெய்வானைப்பிள்ளை, யோகேஸ்வரி, ஜெயலட்சுமி, மனோன்மணி, கண்மணி, பாக்கியம் ஆகியோரின் மைத்துனியும், தர்சாத்தின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (6-5-93) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு 59, குமாரசாமி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

59, குமாரசாமி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்; சி. சிவதாஸ்
(25548)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேமா கொலைச் சம்பவம்:

# தற்கொலையாளி உடலில் குண்டை மற்றொருவரே கட்டியிருப்பார்!

## ஆமர் வீதியில் வீட்டைத் தேடி தேடுதல் வேட்டை

கொழும்பு, மே 6

பிரேமதாஸாவைக் கொலை செய்த தற்கொலைப்படை நபரின் உடலில் ஆமர் வீதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்தே குண்டு கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று பொலிஸார் நம்புகின்றனர்.

அந்த வீட்டில் வைத்தே தட்டையானதாக இருக்கலாம் என்று கருதப்படும் குண்டை தற்கொலையாளியின் உடலில் இருவர் சேர்ந்தே கட்டியிருக்க வேண்டும் என்றும் பொலிஸார் நம்புகின்றனர்.

இதன் காரணமாக சம்பந்தப்பட்ட வீட்டைக் கண்டு பிடிக்கும் நோக்கத்துடன் பொலிஸார் ஆமர் வீதிப்பகுதியில் சோதனை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை வாழைத்தோட்டம், குணசிங்கபுர, ஆமர்வீதி ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் 200பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கொலையாளி, தமது 'சமக் கட்டி'னால் குண்டை நசுக்கி வெடிக்க வைத்திருப்பார் என பொலிஸார் நம்புகின்றனர்.

கொலையாளி பச்சை சேர்ட் அணிந்து அதற்கு மேலாக பச்சை நிறச் சால்வை போர்த்தி இருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-எ)

## பிரேமா தயாரித்திருந்த வெசாக் செய்தி

கொழும்பு, மே. 6

பிறந்தவர்கள் அனைவருக்கும் இறப்பு நிச்சயம் — இதுவே புத்தபிரானின் போதனை எடுத்துக் காட்டுகின்றது.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா முன்கூட்டியே தாம் தயாரித்து வைத்திருந்த வெசாக் செய்தியில் முன் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1993மே 21ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இடைவரவு விரிவுரையாளர்:

(அ) கிறிஸ்தவ நாகரீகம்
(ஆ) கிறிஸ்தவ வரலாறு (ஐரோப்பா)

கொடுப்பனவு:

மணித்தியாலத்திற்கு 150/- ரூபாவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கு ஏற்ப பயண, உணவுப்படிகளும் வழங்கப்படும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் பத்திரங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி, இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ தாபனக்கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் இவ்விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் பதிவாளர்/ நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் ரூபா 20/-க்கான காசுக் கட்டளை /தபாற்கட்டளையுடன் 23x10 ச. மீ அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1993-04-30.

(சி 5082)


# பாடசாலை தளபாடங்களை சுமந்துசென்ற மாணவிகள்!

வலிகாமம் மேற்கு, மே 6

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவிகள் சுமார் கால்மைல் தூரம் தமது பாடசாலைக்குரிய தளபாடங்களை சுமந்து கொண்டு சென்றனர்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இயங்கிவந்த பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அண்மையில் சங்கானை காவல் பணிமனைக்கு அருகில் உள்ள நாவலர் கல்வி நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலுள்ள தமது பாடசாலைத் தளபாடங்களை மாணவிகள் சுமந்து கொண்டு சென்றனர்.

மாணவிகள் சுமந்து கொண்டு சென்றமையைப் பார்த்த பொதுமக்களும், பெற்றோர்களும் பாடசாலை நிர்வாகத்தினருடன் அதிருப்தி அடைந்துள்ளனர். (ஒ-175)

## பண்ணிசை

உடுவில், மே 6

இணுவில் ஸ்ரீபரராச சேகரப்பிள்ளையார் கோவில் திருநெறிய தமிழ் மறைக் கழகம் எதிர்வரும் சனிக்கிழமை இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடத்த இருந்த பண்ணிசைப் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கழகம் கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு பண்ணிசைப் போட்டிகளை நடத்தி முதலிடம் பெறுபவர்களுக்கு தங்கப் பதக்கங்களை பரிசாக வழங்கி வருவது குறிப்பிடத் தக்கது

(ஒ-152)

## எழுதுவினைஞருக்கு பதவி உயர்வு

அரசாங்க மற்றும் மாகாண சபை சேவைகளில் எழுதுவினைஞர்களாகப் பணிபுரிந்து வரும் பட்டதாரிகளுக்கு பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்புகள் விரைவுபடுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கின் கல்விநிலை 3 வருடங்களில் வீழ்ச்சி!

## கல்விமான்கள் கவலை

யாழ்ப்பாணம், மே 6

வடபகுதி மாணவர்களின் கல்விநிலை கடந்த மூன்று வருடங்களில் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளதை பொதுப் பரீட்சை பெறுபேறுகள் பிரதிபலிக்கின்றன.

கல்விமான்கள் இவ்வாறு கவலை தெரிவித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 91, 92 ஆம் ஆண்டுகளுக்கான ஜி. சி. ஈ. (உயர்தர), ஜி.சி.ஈ. (சாதாரண) பரீட்சைகளின் பெறுபேறுகள் கல்வி நிலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன.

ஜி. சி. ஈ. (உயர்தர) பெறுபேறுகளின் வீழ்ச்சியால் பல்கலைக் கழக அனுமதி குறைந்துள்ளது.

ஜி. சி. ஈ. (சாதாரண தர) பரீட்சை பெறுபேறுகளின் வீழ்ச்சியால் தொழில் வாய்ப்புக்களை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது — என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பரீட்சை வினாத்தாள்களை திருத்துவதில் ஏற்படும் குளறுபடிகளே பெறுபேறு வீழ்ச்சிக்கு காரணம் எனக் கருதப்பட்டு வந்தது —

ஆனால் பரீட்சை ஆணையாளர் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து அது தவறான கருத்து என்பது தெரியவந்துள்ளது — என்றும் கல்விமான்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஜி சி ஈ உயர்தர பரீட்சை பெறுபேறுகள் 75க்கும் 80 வீதத்துக்கும் இடையில் மாணவர்களின் சித்தி நிலைமை இருந்ததாகவும் —

இப்போது அது 40 சத வீதத்துக்கும் 50 சதவீதத்துக்கும் இடையில் இருப்பதாகவும் மதிப்பீடுகள் காட்டுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-3)

## உப்பள ஊழியர் சம்பள கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே. 6

வடபகுதி உப்பளங்களைச் சேர்ந்த நிரந்தர ஊழியர்களின 1992ஆம்ஆண்டிற்கான சம்பளக் கொடுப்பனவு திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது என்று லங்கா சோல்ட் லிமிட்டெட் உற்பத்தி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

சகல ஊழியர்களையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஒன்று கூடுமாறு அவர் கேட்டுள்ளார் (ஒ)

## சுதந்திரக்கட்சி கண்டனம்

கொழும்பு, மே. 6

ஜனாதிபதி பிரேமதாசா படுகொலையுண்ட சம்பவத்தை சுதந்திரக்கட்சி நாடாளுமன்றக் குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

(ஒ-எ)


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 23 — 03 — 1950



உதிர்வு: 06 — 05 — 1992

### முத்தையா லோகநாதன்
(இராசன்)

உருண்டோடியது ஓராண்டு
அமைதி இழந்தோம் நாங்கள்
கலங்கரை விளக்காக நின்றீர்கள்
கண்காணா தூரம் சென்றீர்கள்
கரை காணா கலம் ஆனோம் - நாம்
காரிருள் படிந்தது நம் வாழ்வில்
பாடுபட்டீர்கள் நம் குடும்பம் ஒளிபெற
விழுதுகளின் விருட்சத்தில் ஆறுதல் அடையாமல்
பாசத்தின் சுமையோடு பறந்து விட்டீர்களே!
எம் கண்ணீர்ப் பூக்கள் உம் காலடியில்
எம் உயிருள்ள வரை ஆறாதோ எம்துயர்.

ஆறாத் துயர் கொள்ளும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

கருவில்,
ஊர்காவற்றுறை.



## 120ஆம் நாள் நினைவில் எம் நெஞ்சங்களில்



### கந்தையா பிறேமதாசன்
(பிறேமன்)

உதித்தான்: 09 - 06 - 1974

உதிர்ந்தான்: 06 - 01 - 1993

எத்தனின் குண்டு
உன் நெஞ்சினில் விழுந்து
இன்று நூற்றிருபது நாட்கள்
கழிந்ததுவோ!
எங்கள் நா உன் நாமம்
சொல்லாத நாளில்லை
என்று தணியுமோ எம
இதயக்குமுறல்
உன் செவிகளில் விழுமோ
எங்கள ஓல ஒலிகள!

அன்புடன் நினைவு கூரும்:
- குடும்பத்தினர்.

சித்தன்கேணி.

(25547)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

**Bandam, White African Freasil** இரண்டு மாதக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. பிளான்ட் பரடைஸ், 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (25526)

சுத்த இன பொமனேரியன் நாய்க்குட்டிகள் 45 நாட்கள் நிறைவடைந்தது. பூச்சி அகற்றிய நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸிந்துஜா வைத்திஸ்வரன், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆண்கள் பாடசாலை முன்பாக. (6149)

கல்வி நிலையங்களுக்குத் தேவையான 6 அடி நீளமுள்ள புதிய மேசை, வாங்குகள் உடன் விற்பனைக்குண்டு. பிளான்ட் பரடைஸ், 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (25527)

சுகாதார முறைப்படி வறுத்துத் திரித்த தரமான சன் பிறாண்ட் மிளகாய்த் தூள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (25332)

## உடன் விற்பனைக்கு

ஹைலன் பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி", சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (25534)

## பெயர் மாற்றம்

யாழ். நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் கணேசலிங்கம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25537)

## ஜோதிட விஞ்ஞானம்

ஆயுள் உள்ளவரை ஜனாதிபதியாயினும் இலங்கைக்கும், ஜனாதிபதிக்கும் மூன்றாவது ஏழரைச்சனி அட்டமத்து வியாழனுடன் மாரகம் செய்யுமென முன்கூட்டியே வெளியிடப்பட்டது. அக்டோபர் வரை அரசியல் கொலைகள், குண்டு வெடிப்புக்களையும், கிளர்ச்சிகளையும் உண்டாக்கும். இராசிப்பலன்கள், கைரேகை சாஸ்திரத்துடன் விற்பனையாகின்றன. சதியா, கட்டுடை. (5911)

## கோழித்தீன் வெற்றுபக்கற்

கோழித்தீன் வெற்றுப்பக்கற் தேவை. "மில்க்வைற்" (இ-5086)

# ஒரு மாதத்தில் 25 ஆயிரம் பேர் சிகிச்சை!

யாழ்ப்பாணம், மே 6

யாழ். போதனா வைத்திய சாலையின் வெளி நோயாளர் பிரிவில் கடந்த ஏப்ரல் மாதம் மட்டும் 25 ஆயிரத்து 25 பேர் சிகிச்சைபெற்றுள்ளனர் என்று வைத்தியசாலையின் புள்ளி விபர பட்டியலில் இருந்து தெரியவருகிறது.

அதே மாதத்தில் வார்ட்டுகளில் 4 ஆயிரத்து 600 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக நெருப்புக் காய்ச்சல், மலேரியா ஆகிய நோய்களுக்கு சிகிச்சை பெறுவோரே அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது (ஒ-17)

# தேவை

யாழ். மணிக்கூட்டு வீதி, அரசடி விநாயகர் ஆலயத்திற்கு ஓர் மடப்பள்ளி ஐயர் (பரிசாரகர்) தேவை. சுய விபரங்களுடன் 25-05-1993க்கு முன் விண்ணப்பிக்கவும். சம்பளமும், இருப்பிட வசதியும் பேசித் தீர்க்கப்படும். காரியதரிசியுடன் தொடர்புகொள்ளவும்.

— பரிபாலன சபை.

(25541)

# மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய ஆதரவில் இயங்கும்

**தீசன் பாலர் பாடசாலை**

வளர்ச்சிக்காக நடைபெற உள்ளது.

இடம்: கந்தரோடை மைதானம்
காலம்: 16 — 05 — 1993 ஞாயிறு
பிற்பகல் 2-00 மணி
பிரவேசம்: ரூபா 10-00

விளம்பர அன்பளிப்பு:
சைன் கல்வி நிலையம்,
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

(5914)

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

## A/L 95

புதிய பிரிவு

ஆரம்பம்:
08 - 05 - 1993
காலை 7-00 மணி

பொருளியல் — மகேந்திரன்
கணக்கியல் — Sam
வர்த்தகம் — தேவா, குகன்
அளவையியல் — சோதி
புவியியல் — சண்
அரசியல் — கியூபேட்
வரலாறு — நாகராணி
தமிழ் — குழந்தை
இ. நாகரிகம் ] — அருள்நங்கை
இ. சமயம் ]
கிறீஸ்தவம் — அருட் சகோதரர்

★ அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(சி-4987)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 22 — 05 — 1937



உதிர்வு: 06 — 05 — 1990

## அமரர் நாகலிங்கம் சிவபாதசுந்தரம்

(Formerly Deputy Director, Dept. of Buildings)

அன்பின் இருப்பிடமாய்,
பண்பின் உறைவிடமாய்,
பாசத்தின் ஒளிவிளக்காய்,
பதவியில் மேன்மையாய்,
இல்லறத்தை இனிதே நடத்தி மறைந்த,
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன் வாழும்;
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

"ஜெயபதி",
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

(6151)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இறுதிப் பிரிவு

## O/L DAY CLASSES

ஆரம்பம்: 06-05-1993
(8.00 — 2.00)

★ அனுமதிக்கு முந்துங்கள். (சி-4981)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 13 — 09 — 1950



மறைவு: 18 — 04 — 1992

## அமரர் வி. ஜெயபாலன்

(மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க முன்னாள் உதவிப் பொருளாளர்)

திதி: 06-05-1993

எம்மை ஆறாத்துயரில் விட்டு மீளாத் துயில் கொண்ட அன்புத் தெய்வமே! எத்தனை ஆண்டுகள் சென்றாலும், உம் நினைவு எம் நெஞ்சைவிட்டகலா.

மனைவி, பிள்ளைகள்.

முதலியார் கனகசபை வீதி,
மானிப்பாய். (25359)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 02 — 07 — 1929

மறைவு: 06 — 05 — 1991



## அருட்திரு. லோ. வ. இராயப்பு

(அ. ம. தி.)

அன்பு பொழிந்து, அமுதமொழிபேசி, ஆண்டவனின் தொண்டாற்ற அருங்குருக்களை உருவாக்கி, எம்மை எல்லாம் ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு, இறைவனடி சேர்ந்துவிட்ட அருட்திரு. லோ. வ. இராயப்பு அ. ம. தியாகி அவர்களை மறப்போமா வையகத்தில்.

சகோதர, சகோதரிகள்,
குடும்பத்தினர்.

797, கடற்கரை வீதி,
பாஷையூர். (25543)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உறுதிமொழி சரி வருமா?

கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் மீது தாக்குதல் எதுவும் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளப்படும். அதற்கேற்ற வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் அச்சமடையத் தேவையில்லை.

ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையை அடுத்து, அதற்குப் பழிவாங்கும் நோக்குடன், கொழும்பிலும், தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளிலும் தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற அச்ச நிலை— பதற்றம்— நிலவுகிறது. அந்நிலையைச் சுட்டிக் காட்டி, சில குறிப்பிட்ட பகுதிகளில் தமிழர்களைச் சில குழுக்கள் அச்சுறுத்தி வருவதை குறிப்பிட்டுக் கூறி, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவும், கொழும்புத் தமிழ் அரசியல்வாதிகளும், பதில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அப்போதே முன் கூண்ட உறுதிமொழியை விஜேதுங்கா தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் ஏதோ ஒரு மூலையில் நடக்கும் சிறு அசம்பாவிதத்தில் தமிழர்கள் சம்பந்தப்பட்டுவிட்டால், அது நாடளாவிய அளவில் தமிழினத்தின் மீதான பெரும் தாக்குதலாக மாறிவிடும்.

இந்த வகையில் 1958, 1977, 1981, 1983ஆம் ஆண்டு இனக் கலவரங்களைத் தமிழர்கள் தமது வாழ்நாளில் மறந்துவிட முடியாது. ஈழத்தமிழர் சரித்திரத்தில் அவை கல்மேல் எழுத்துக்களாகப் பதிந்துள்ளன.

எனவே லலித் அத்துலத்முதலியின் கொலையின் பின்னரும், இப்போது பிரேமதாசாவின் கொலையின் பின்னரும், கொழும்பிலும் தெற்கின் ஏனைய பகுதிகளிலும் வாழும் தமிழர்கள் தாம் தாக்குதல்களுக்கு ஆளாகக்கூடும் என்று அஞ்சுவது இயல்பே.

பிரேமதாசா கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் பொலீஸார் இன்னமும் தமது விசாரணையை முடிக்கவில்லை. கொலையை நடத்தியவர் யார் என்று இனங்காணவில்லை. ஆனால் இந்தக் கொலையில் தமிழர்களுக்குச் சம்பந்தமுண்டு எனக் காட்டும் வகையில் தகவல்களை வெளியிட்டு வருகின்றனர். லலித் கொலை சம்பந்தமாக ரூபவாஹினி நடந்து கொண்டது போல.

பிரேமதாசா கொலையைத் தமிழர்களே செய்தார்கள் என்ற எண்ணத்தைச் சிங்களவர்கள் மனதில் விதைத்து அதன் மூலம் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்களைத் தூண்டிவிட பொலீஸ் அதிகாரிகள் வெகு திறமையாகச் செயற்பட்டு வருகிறார்கள்!

கொழும்பில் பல இடங்களில் சிங்களவர்களின் குழுக்கள் தமிழர்களை அச்சுறுத்தி வருகின்றன. அதனால் தமிழர்கள் நகரைவிட்டு வெளியேறுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் பொலீஸார் வெளியிட்டுவரும் விசமத்தனமான தகவல்களே!

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பணியைப் பிரதான கடமையாகக் கொண்ட பொலீஸாரே, அரசாங்கத்தின் ஓர் அங்கமே, தமிழர் மீதான தாக்குதலுக்குத் தூபமிடுகிறது என்றால் ...

கொழும்பில் உள்ள அமைச்சர் ஒருவரே தமிழர் மீதான தாக்குதல்களுக்குத் திட்டமிட்டுள்ளார் என்றால்......

தமிழ் மக்கள் மீது தாக்குதல் எதுவும் நடைபெறாது என்றும், தமிழ் மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் பதில் ஜனாதிபதி என்ன யோக்கியதையுடன் கூறுகிறார் ?

பிரேமதாசாவின் இறுதிச் சடங்கு நாளான இன்று ஒரு ''கறுப்பு மே'' உருவாகாது என்று நம்புவது எப்படி?

## ஆலயங்களில்

வண்ணை கோவில் முத்து விநாயகர் தேவஸ்தான சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் நடைபெற்று மாலை திருவூஞ்சலைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் வீதி உலா வருவார். (க)

o o o

யாழ்ப்பாணம் வண்ணை அருள்மிகு அரசடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி. தொடர்ந்து பத்து தினங்களுக்கு நடைபெறும்.

## சமுத்திர தீர்த்தம்

யாழ்ப்பாணம், மே 6

இராணுவ நடவடிக்கைகளினால் கடந்த 10 வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்த பருத்தித்துறை கோட்டடி ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் சமுத்திர தீர்த்த உற்சவம் இம்முறை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று காலை 6 மணிக்கு ஆலயத்தில் இருந்து புறப்படும் அம்பாள் சுப்பர்மடம் கடற்கரையில் சமுத்திர தீர்த்த மாடவுள்ளார்.

தீர்த்த உற்சவம் முடிவடைந்ததும் இரவு 7மணிமுதல் அங்கு கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். (உ-15)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 6

வேலணை துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் யாழ் அரசடி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட இடத்தில் நாளை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவிருக்கிறது. திவகத் தளபதி திரு. வில்வன் வைபவரீதியாக திறந்துவைப்பார். (உ)

## பாஸ்கரலிங்கம் வாஷிங்டனுக்கு

கொழும்பு, மே 6

நிதி அமைச்சுச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் கடந்த ஞாயிறு வாஷிங்டன் சென்றார்.

பதில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பணிப்பின் கீழ் அவர் பயணத்தை மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் பாரிஸில் நடைபெறவிருக்கிறது. அது பற்றிய ஏற்பாடுகளைப் பூர்த்தியாக்குவது தொடர்பாக உலக வங்கியுடன் பேச்சுகள் நடத்தவே திரு. பாஸ்கரலிங்கம் வாஷிங்டன் சென்றிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது

## வி. பி. சிங் இராஜினாமா

புதுடில்லி, மே 6

ஜனதா தளம் கட்சித் தலைவர் பதவியில் இருந்து தாம் இராஜினாமாச் செய்து விட்டதாக முன்னாள் பிரதமர் வி. பி. சிங் நேற்று அறிவித்தார்.

லோக சபை சபாநாயகருக்கும் தாம் இதனை அறிவித்து விட்டதாகவும் அவர் கூறினார். [உ-எ]

### கொழும்பில்...

( 1ஆம பக்கத் தொடர்ச்சி)

படுத்தலின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் —

ஜனாதிபதி பிரேமதாஸா கொலையை அடுத்து எதிரணியினருக்கு எதிராக அரசியல் ரீதியான வன்செயல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளன.

சில இடங்களில் எதிரணி அரசியல்வாதிகள் தாக்கப்பட்டுள்ளனர்.

பல இடங்களில் தாக்குதல் முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒருவருக்கு மொட்டையடிக்கப்பட்டுள்ளது. வெடி கொளுத்தியவர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டும், தாக்கப்பட்டும், மிரட்டப்பட்டும்உள்ளனர்.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

சனக்கூட்டத்தில் இருந்து

# ஜனாதிபதியை நோக்கி நேராக ஒருவர் சைக்கிளில் வந்தார்

## மரணவிசாரணையில் சாட்சியம்

ஜனாதிபதி நின்ற இடத்தில் இருந்து சுமார் மூன்று மீற்றர் தூரத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். அப்போது சனக் கூட்டத்தில் இருந்து ஒருவர் வருவதை நான் கண்டேன் அவர் நேராக பிரேமாதாஸாவை நோக்கி வந்தார்,

இவ்வாறு கொழும்பு மேலதிக நீதிவான் சம்பா புலபாலா முன்னால், ஜனாதிபதி பிரமதாசாவின் கொலை பற்றிய மரண விசாரணையில்சாட்சியம்அளித்த ஆனந்த கீர்த்தி டி. சொய்சா (45 வயது) தெரிவித்தார்.

சொய்சா குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமுற்றவர்களில் ஒருவராவார்.

அவர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினப் பேரணியை ஒழுங்குபடுத்துவதில் பிரேமதாசா ஈடுபட்டுக்கொண்டு வந்திருந்தார்.

அச்சமயம் மெசஞ்சர் வீதிப் பக்கத்தில் இருந்து வந்த குழு ஒன்றை பஞ்சிகாவத்தை வீதியில் வந்துகொண்டிருந்த பிரதான ஊர்வலத்தை நோக்கி ஜனாதிபதி வழிநடத்திக் கொண்டிருந்தார்.

கிராண்ட்பாஸ் பக்கமாக ஜனாதிபதி நின்ற இடத்தில் இருந்து சுமார் மூன்று மீற்றர் தூரத்தில் நான் நின்று கொண்டு இருந்தேன். அப்போது சனக் கூட்டத்தில் இருந்து சைக்கிளில் ஒருவர் வருவதை நான் கண்டேன்.

சைக்கிளில் வந்தவர் பிரேமதாசவை நோக்கி நேராக வந்தார். அந்த நேரம் ஜனாதிபதியின் தனிப்பட்ட உதவியாளர் முகைதீன் சைக்கிளின் கைப்பிடியைப் பிடித்து சைக்கிளில் வந்தவரை நிறுத்தினார். அந்த நேரத்தில் பெரும் வெடிச்சதிகம் ஏற்பட்டது.

சைக்கிளில் வந்த நபர் வெள்ளை நிற அரைக்கை சட்டையும் காற் சட்டையும் அணிந்திருந்தார். வெள்ளை நிற ''ஸ்போர்ட்'' சப்பாத்தும் அவர் அணிந்திருந்தார். அந்த நபர் பொது நிறமானவராக இருந்தார். கட்டையாக தலைமயிர் வெட்டியிருந்தார். முடி பின்னால் வாரிவிடப் பட்டிருந்தது— என்றார். (அ-எ)

# தொழிலாளர் பிரச்சினைக்கு தமிழீழமே நிரந்தரத் தீர்வு

## மேதினக் கூட்டத்தில் இளங்குமரன்

யாழ்ப்பாணம் மே 6

எமது தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தமிழீழம் ஒன்று தான் முழுமையான, நிரந்தரமான தீர்வாக அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ கல்விப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன்.

மேதினத்தையொட்டி யாழ். பல்கலைக்கழக வளாக மைதானத்தில் கடந்த சனியன்று மாலை இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்—

இலங்கையில் முதன் முதலாக தொழிற் சங்கத்தை அமைத்தவர்கள் தமிழர்கள்.

தமிழீழ தொழிலாளர் வர்க்கம் முழுமையாக ஒன்றிணைந்து இந்தப் போரட்டத்தில் இணைந்து கொள்வதே இன்று அவர்களுக்கு உள்ள ஒரே வழி என்றார்.

அன்று மாலை 5 மணி அளவில் மேதினப் பேரணி கூட்டமைதானத்தை அடைந்ததும் அங்கு பொதுக் கூட்டம் ஆரம்பமானது.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு பா. நடேசன் ஈகைச்சுடரை ஏற்றினார். பேரணியில் எடுத்து வரப்பட்ட தமிழீழத்தேசியத் தலைவரின் உருவப்படம் கூட்டம் நடைபெற்ற மேடையில் வைக்கப்பட்டிருந்தது.

தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன், தமிழீழ நிதித் துறைப் பொறுப்பாளர் திரு. பரா, விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி ஆகியோர் உட்படப் பலர் கூட்டத்தில் உரையாற்றினர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் இந்தக் கூட்டத்தில் வைத்து வழங்கப்பட்டன. [இ-5]

## அராலியில் ஷெல் தாக்குதல்

அராலித்துறையில் நிலை கொண்டுள்ள படையினர் கடந்த திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தாக்குதல்களை நடத்தினர்.

அராலி தெற்கு, அராலி மத்தி ஆகிய பகுதிகளில் ஷெல், பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன. அப் பகுதிகளை நோக்கி சரமாரியான வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. சரஸ்வதி மகா வித்தியாலயத்துக்கு அருகிலும் ரவைகள் வந்து விழுந்தன.

இதேவேளை, கடந்த சில தினங்களாக ?ரவில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் மீனவர்களை நோக்கியும் படையினர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

## தொழில் நுட்ப பரீட்சை

யாழ்ப்பாணம், மே 6

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த யாழ் தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைகள் அன்றைய தினம் நடைபெற மாட்டா என்றும்—

அந்தப் பரீட்சைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்றும் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் திரு. க. ஜெயரட்ணம் அறிவித்துள்ளார். (உ-5)

## இரு தமிழர்களும் உயிரிழந்தனர்

கொழும்பு' மே 6

ஆமர் வீதிச் சந்தியில் ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொலை செய்த குண்டு வெடிப்பின்போது, இரு தமிழர்களும் உயிரிழந்தனர். கே. கே. ஐயர் சண்முகநாதன், பாஸ்கரன்ராஜா ஆகிய இரு தமிழர்களுமே உயிரிழந்தவர்களாவர். (உ-எ)

### பிரேமாவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் தாடை உடைந்துவாய் திறந்த வண்ணம் காணப்பட்டது கழுத்தில் ஆறு அங்குல காயம் ஒன்று காணப்பட்டது. முழங்கை அளவில் அவரது இடதுகரம் உடைந்திருந்தது. இடதுகால் முழங்காலின் கீழ் முறிந்து இருந்தது.

அவரது வலது கையில் 10 அங்குல வெட்டுக்காயம் இருந்தது. உடலில் இருந்து பெரும் எண்ணிக்கையில் ரவைகள் (pellets) அகற்றப்பட்டன.

— இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

## யாழ். - வன்னித் தொடர்பு: 3 செயலகங்கள் இயங்கும்

யாழ்ப்பாணம், மே 6

நெருக்கடிகால யாழ்-வன்னி தொடர்பு சேவைக்கான செயலகங்கள் மூன்று இடங்களில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில், மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்துக்கு அண்மையிலும் (முன்னைய காப்புறுதிக் கூட்டுத்தாபன கட்டடத்தில்) —

கிளிநொச்சியில், கரடிப்போக்கு சந்திக்கு அண்மையில் உள்ள கட்டடத்திலும்—

தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் — இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

செயலகங்கள் காலை 9மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணிவரையும், பிற்பகல் 1-30 மணி தொடக்கம் மாலை 5மணி வரையும் இயங்கும் என்றும்—

வாரத்தில் ஏழு நாட்களும் மேற்குறிப்பிட்ட நேர ஒழுங்குப்படி கரும பீடங்கள் இயங்கும் என்றும் — தெரிவிக்கப் பட்டுள்ளது அ-3)

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணை ஆரம்பம்

புதுடில்லி, மே 6

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு விசாரணை நேற்று ஆரம்பமாகியது. சென்னைக்கு அருகே பூந்தமல்லியில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்புடன் தொடங்கிய விசாரணையின் போது அரசதரப்பு வழக்கறிஞர் வழக்கின் விவரங்களை நீதிபதி முன் எடுத்துரைத்தார்.

விசாரணையின் போது வழக்கில் சம்பந்தப்பட்ட 26 பேரும் நீதிமன்றில் ஆஜராகி இருந்தனர் ஆனால் அவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகியிருக்கவில்லை

விசேட நீதிமன்ற நீதிபதி திரு எஸ் எம். சித்திக் அரசுதரப்பு வழக்கறிஞரின் வாதங்களைக் கேட்டபின் எதிர் வரும் 12 ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேமா காயமுற்றதாகக் கூறி ஹேமாவைக் கூட்டி வந்தனர்

## கண்டியிலிருந்து கண்ணீருடன் வந்தார்

கொழும்பு, மே 6

ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலையுண்ட தினத்தன்று நடந்தவற்றை, ஜனாதிபதி செயலக தகவல் துறை சிரேஷ்ட உதவிச் செயலாளர் அந்தனி பெர்னாண்டோ நினைவு கூர்ந்தார்.

அவர் கூறியதாவது:-

''1988இல் இருந்து அரசாங்கம் செய்த பணிகளை எல்லாம் தொகுத்து அறிக்கையாக ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் கொடுத்துவிட்டு, அன்று நண்பகல் 12 மணியளவில் ஜனாதிபதி செயலகத்துக்கு திரும்பிவிட்டேன். ஒரு மணியளவில் ஆமர் வீதிச் சந்தியில் குண்டு வெடிப்பு என்று ஜனாதிபதி செயலகத்துக்கு தகவல் வந்தது. அச்சம்பவத்தில் பலர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. குண்டு வெடிப்பின் மத்தியில் ஜனாதிபதி சிக்கிக் கொண்டதாக முதலில் வந்த தகவலில் சாடைமாடையாகக் கூட தெரிவிக்கப்படவில்லை. பின்னர் வந்த தகவல் ஒன்று ஜனாதிபதி அருகில் குண்டு வெடித்ததாகத் தெரிவித்தது எனினும் ஜனாதிபதி பாதுகாப்பாக கூட்டிச் செல்லப்பட்டார் என்றும் எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

சிறிது நேரம் கழித்து ஜனாதிபதியின் பத்திரிகைச் செயலாளர் இவான்ஸ் கூரே செயலகத்துக்கு விரைந்து வந்து ஆமர் வீதியில் குண்டு வெடித்தது என்று தெரிவித்தார். குண்டு வெடித்த பின்னர் ஜனாதிபதியைத் தாம் காணவில்லை என்றும் அவர் கூறினார்.

அப்படியானால் எங்கே ஜனாதிபதி என்ற முக்கிய கேள்வி எழுந்தது. சுசரித்த வாசஸ் தலம், பொலீஸ் மற்றும் எல்லா இடங்களையும் தொலைபேசி மூலம் விசாரித்தோம். பிரேமதாஸா வாகனம் ஒன்றில் பாதுகாப்பாகச் சென்றதைக் கண்டதாகச் சிலர் சொன்னபோது சிறிது ஆறுதலாக இருந்தது; அவ்வாறு கூட்டிச் செல்லப்பட்டது குண்டு வெடிப்புக்கு முன்னரா அல்லது பின்னரா என்பதை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. எல்லா வானொலி தொடர்புகளும் செயலிழந்து விட்டன.

நாம் 'சுசரித்த'வுக்கு விரைந்தோம் அங்கு ஜனாதிபதியின் அந்தரங்க உதவியாளர் முகைதீன் மற்றும் மெய்ப்பாது காவலர்கள் உயிரிழந்ததாக எமக்குச் சொன்னார்கள். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு என்ன நடந்தது என்பதை அறிவதில் தீவிரமானோம். ஜனாதிபதி பற்றி உறுதிப் படுத்தப்பட்ட தகவல் ஏதும் எமக்குகிடைக்கவில்லை.

அந்தச் சமயத்தில் —

மேதினப் பேரணியில் வேறு இடத்தில் சென்று கொண்டிருந்த பிரதமர் டி. பி. விஜேதுங்காவை மிகக்கூடுதலான பாதுகாப்புடன் ஜனாதிபதி செயலகத்துக்கு கூட்டி வரும்படி அமைச்சர் ரணில் விக்கிரசிங்கா உத்தரவிட்டார் என்ற செய்தி எமக்கு கிடைத்தது

நாம் உடனே ஜனாதிபதி செயலகத்துக்கு விரைவாகத் திரும்பினோம். ஜனாதிபதியின் செயலாளர் அறைக்குள் சென்றபோது அங்கு பிரதமர், சட்டமா அதிபர், பொலீஸ்மா அதிபர், அமைச்சர் சிறிசேன கூரே. நாடாளுமன்ற உறுப்பினர் சொக்ஸி ஆகியோர் இருக்கக் கண்டோம். அந்தச் சமயத்தில்தான் எம்மிடம் அந்தப் பேரிடியான செய்தி தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி இறந்து விட்டார் என்பதை அறிவிக்கும் உத்தியோகபூர்வமான அறிக்கை அங்கு வைத்துத்தான் தயாரிக்கப்பட்டது

பிற்பகல் 2 30 மணி இருக்கும் ஜனாதிபதி கொலை செய்யப்பட்ட விஷயம் தெரியாத மக்கள் பெரும் எண்ணிக்கையில் காலிமுகத்திடல் மைதானத்தை நோக்கிச் செல்வதை ஜனாதிபதி செயலகத்தில் இருந்து பார்த்தோம்.

அந்தச் சமயத்தில் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கண்ணீருடன் ஹேமா பிரேமதாஸா அறைக்குள் பிரவேசித்தார். கண்டி ஜனாதிபதி மாளிகையில் தங்கியிருந்த அவரை ஜனாதிபதி காயமடைந்துவிட்டார் என்று கூறியே கொழும்புக்கு அழைத்து வந்தார்கள்.

ஹேமா அறைக்குள் நுழைந்ததும், எங்கே ஜனாதிபதி என்பதைக் கூறுங்கள் எங்கே அவர், சொல்லுங்கள்''— என்று கேட்டார்.

ஜனாதிபதி கொலையுண்ட செய்தியை பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ் பெரேராவும் பிரதி பொலீஸ் மா அதிபர் ஏ. எஸ் செனவிரத்னாவும் தான் ஹேமாவுக்கு தெரியப் படுத்தினர்.

ஹேமா பிரேமதாஸா உடனே கதிரையில் மயங்கி வீழ்ந்தார்; சில நிமிடங்களில் மயக்கம் தெளிந்ததும் ஜனாதிபதியின் உடலைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு அவர் சென்றார்.

—இவ்வாறு திரு அந்தனி பெர்னாண்டோ தெரிவித்தார். (உ-எ)

# 1994 இறுதி வரை பதவியில் விஜேதுங்கா இருப்பார்

## அமைச்சர் ரணில் தகவல்

கொழும்பு, மே 6

ஜனாதிபதியின் பதவிக் காலம் 1995 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி முடிவடையும் வரை அப்பதவியை திரு. டி. பி. விஜேதுங்கா வகிப்பார்

அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் கூறினார்.

கேள்வி: புதிய ஜனாதிபதியால் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமா?

ரணில்; ஜனாதிபதி படுகொலையின் பின்னர் சமாதானத்தை நிலைநாட்டுவதில் வெற்றி கண்டுள்ளோம்.

கேள்வி: ஜனாதிபதி படுகொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் தீவிரப்படுத்தப்படவேண்டும் என்று கோரப்பட்டுள்ளதா?

ரணில்: விடுதலைப் புலிகள் மீது குற்றஞ் சுமத்துவதற்கு முன்னர், விசாரணையின் முடிவு வெளிவரும் வரை காத்து இருக்க வேண்டும்.

கேள்வி: இனப்பிரச்சினைக்கு புதிய ஜனாதிபதியால் தீர்வு காணமுடியுமா?

ரணில்: இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவது அனைவரதும் முயற்சியாகும்

## பிரேமா கொலையை அடுத்து

# தேசிய அரசு அமைப்பதை ராணுவ தளபதி விரும்பினார்

ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலையுண்டதை அடுத்து, தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவவேண்டும் என்ற யோசனையை சில அமைச்சர்களிடம் தெரிவித்தவர்களில் இராணுவத் தளபதி லெப்டினன்ட ஜெனரல் சிசில் வைத்தியரத்ன குறிப்பிடத்தக்கவராவர்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இச்செய்தியை வெளியிட்டது

ஜனாதிபதி பதவி நீடிப்பு வழங்காத பட்சத்தில், இராணுவத் தளபதி வைத்தியரத்னாவின் பதவிக்காலம் மே 16 இல் முடிவடைகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]


கொழும்புத்துறை மேற்கு
சனசமூக நிலைய நூலக வளர்ச்சிக்காக

யாழ். ரமணனின் புதிய பாடல்களின்
இசையமைப்பில்

ராஜன்ஸ் குழுவினரின்

இன்னிசை விருந்து

காலம்: 08 — 05 — 1993 சனி இரவு 8 மணி
இடம்: கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய திறந்தவெளியரங்கு.

விளம்பர அன்பளிப்பு:
எஸ். வீ. முருகேசு,
158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(25546)


மரண அறிவித்தல்கள் 2 ஆம்பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அரசியல்வாதிகளுக்கு கிருலப்பனை அதிர்ஷ்டம் இல்லாத இடமா?

கொழும்பு, மே 6

ஏப்ரல் 23 ஆம் திகதி கிருலப்பனையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் வைத்துத்தான் ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரின் கடைசிக் கூட்டம் அங்குதான் நடந்தது.

ஏப்ரல் 30 ஆம் திகதி கிருலப்பனையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாஸா பேசினார். மறுநாள் அவர் மேதினப் பேரணியில் குண்டுத் தாக்குதலில் பலியானார். பிரேமதாஸாவின் கடைசிப் பேச்சும் கிருலப்பனையில்தான் இடம் பெற்றது.

இதனால் கிருலப்பனை. அரசியல்வாதிகளுக்கு அதிர்ஷ்டமில்லாத இடமாக மாறிவிட்டதா என்று கேள்வி எழுப்பப் பட்டுள்ளது. (உ-எ)

# " ஒப்சேவர் " நாளிதழ் அரசுப் பத்திரிகையல்லவாம்

## பதில் ஜனாதிபதி கூறுகிறார்

'' ஒப்சேவர் '' நாளிதழ் அரசுப் பத்திரிகை அல்ல''

இவ்வாறு குறிப்பிட்டார் பதில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க.

ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொலை செய்த தற்கொலைத் தாக்குதல் நபர் ஒரு தமிழர் என்று தெரிவித்து நேற்று முன்தினம் '' ஒப்சேவர் '' பத்திரிகையில் வெளியான செய்தி குறித்து செய்தியாளர் ஒருவர் அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொலை பற்றிய விசாரணைகள் முடிவடையவில்லை ஆகவே கொலையாளி யார் என்பதை இப்போது எவரும் நிச்சயமாகக் கூறமுடியாது — இவ்வாறு அவர் மேலும் சொன்னார்.

'' ஒப்சேவர் '' பத்திரிகை அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ' லேக் ஹவுஸ் நிறுவனத்தினால் வெளியிடப்படுவது என்பது தெரிந்ததே.

# ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் புலனாய்வுப் பிரிவினர்

கொழும்பு, மே 6

கொழும்பு, பார்க் வீதியில் ஈ. பி. டி. பி. அலுவலகம் இருந்த கட்டடத்தில் கூட்டுப் படைகள் கட்டளைப் பீட புலனாய்வுப் பிரிவினர் தற்போது உள்ளனர்

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி " சண்டே ரைம்ஸ் '' இத் தகவலை வெளியிட்டுள்ளது.

அங்கு தங்கியுள்ள படையினர் புலனாய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கட்டடத்தில் சில ஈ. பி. டி. பியினர் இன்னும் தங்கியிருப்பதாகவும் சில வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈ. பி. டி. பி. தங்கியிருந்த அந்தக் கட்டடத்தின் வாடகையை பாதுகாப்பு அமைச்சே செலுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் கொலையையடுத்து எதிர்க்கட்சிகள் தெரிவித்த ஆட்சேபனையின் பேரில், அந்தக் கட்டடத்தில் தங்கியிருந்த ஈ. பி. டி. பியினர் அங்கிருந்து அகற்றப்பட்டனர் என்பதும்—

அவர்கள் திருகோணமலைக்கு அனுப்பப்படுவதாக அறிவிக்கப்பட்டதும் தெரிந்தவையே. (உ-எ-3)

# நீதிவானுக்கு வந்த கனவு!

கொழும்பு, மே 6

பிரேமதாசாவின் படுகொலை பற்றி மரண விசாரணை நடத்திய கொழும்பு மேலதிக நீதிவான் சம்பா புதிபாலா மூன்று வாரங்களுக்கு முன்னர் தாம் கண்ட கனவு ஒன்றை வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது:-

நான் ஒருநாளும் ஜனாதிபதி பிரேமதாஸாவை தனிப்பட்ட ரீதியில் சந்தித்ததிடையாது

ஆனால், மூன்று வாரங்களுக்கு முன்னர், நான் ஜனாதிபதியுடன் பேசுவதாகக் கனவு கண்டேன்.

நேற்று நிஜமாக நான் பிரேமதாஸாவைக் கண்டபோது, அவர் இறந்திருந்தார்.

— இப்படி அவர் கூறினார்.

# பொலீஸிடம் சரணடைய வீரப்பன் தயாராம்!

சென்னை, மே 6

இந்தியாவின் பிரபல சந்தன மரக்கடத்தல் காரன் வீரப்பன் தான் பொலீஸாரிடம் சரணடைய தயாராக இருப்பதாக அறிவித்துள்ளான்.

''நக்கீரன்'' வார இதழ் இத்தகவலை வெளியிட்டுள்ளது

தனக்குக் குறைவான தண்டனையை அரசு தர சம்மதிக்கும் பட்சத்திலும் —

தன்னை சிறையில் முறையாக நடத்துவதாக பொலீஸார் உறுதியளிக்கும் பட்சத்திலும் —

தான் சரணடையத் தயார் என்று வீரப்பன் கூறியதாக ''நக்கீரன்'' தெரிவித்திருக்கிறது

கடந்த மாதம் கண்ணி வெடித்தாக்குதல் மூலம் 21 பேரைக்கொன்ற வீரப்பன் இதுவரை சுமார் 80 பொலீஸார் மற்றும் வனபரிபாலன ஊழியர்களைக் கொலை செய்திருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. (உ-எ)

# தொலைக்கல்விப் பயிற்சி பரீட்சைகள் 13, 14 இல்

யாழ்ப்பாணம், மே 6

பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்வி பயிற்சி நெறிப் பரீட்சைகள் எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன

நேற்றும், இன்றும் நடைபெறவிருந்த இந்தப் பரீட்சைகள் பின்போடப்பட்டுள்ளதாகவும் —

எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் அவற்றை நடத்த வசதியாக வினாத்தாள்கள் விமானமூலம் யாழ்ப்பாணம் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகவும் —

பரீட்சை ஆணையாளர் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கத்துக்கு வானொலி மூலம் செய்தி ஒன்றை நேற்று மாலை அனுப்பியுள்ளார். (உ-எ)

# இந்திய ஜனாதிபதி உதவினார்

கொழும்பு, மே 6

ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலையுண்ட தினம் புதுடில்லியில் தங்கி இருந்த முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, உடனே அவசரமாக கொழும்பு திரும்புவதற்கு இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா தாம் பயன்படுத்தும் போயிங் ஜெட் விமானத்தைக் கொடுத்து உதவினார்.

— இவ்வாறு ''டெய்லி நியூஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(உ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org